
# கமநலம்

மார்கழி
December 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 991

# கமநலம்

மலர் - 7
இதழ் : 4
1980

கமக்காரர்களின் மத்தியில் தன்நம்பிக்கையையும், மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய சிறு வனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி நிரந்தரமான தொன்ருக்கிக் கொள்ள இச்சஞ்சிகை உதவும்.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் காலாண்டு வெளியீடு.

## பொருளடக்கம்

பக்கம்

2. கமத்துறையில் கூட்டுறவுச் சங்கங்கள்
6. சிறு கமக்காரர்களுக்கான முன்னேடித் திட்டம்
9. அபிவிருத்திப் பணிகளில் சர்வோதய இயக்கம்
12. சிறகு அவரையின் மகத்துவம்.........
14. "கமநலம்" செய்தி முனை
16. கிராம அபிவிருத்தியில் கி. அ. சபைகளின் பங்கு
20. மரக்கறிக்கு நியாய விலை
24. குறுக்கெழுத்துப் போட்டி



அட்டைப்படம் :-

கிராமிய நிறுவனங்களுக்கும் கமககார
களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்
உள்ளது என்பதைப் படம் சித்தரிக்கிறது

புகைப்படம்: சாந்த வீரசிங்க

ஆசிரியர்கள்:

க. தில்லைநாதன்
சோ. ராமேஸ்வரன்

விலை ரூபா 1-50

வருட சந்தா ரூபா 5-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமத்துறையில் கூட்டுறவுச் சங்கங்கள்



இலங்கையில் கூட்டுறவு இயக்கமானது 1911ஆம் ஆண்டில் அறிமுகமானது. அப்போதிருந்த காலணித்துவ அரசாங்கம் கமத்தொழில் வங்கிக் குழுவின் விதப்புரைகளுக்கு இணங்கக் கொண்டு வரப்பட்ட கூட்டுறவு கடன் சபைகள் சட்டத்தின் கீழ் இவ்வியக்கத்தை அறிமுகப்படுத்தியது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போதே கூட்டுறவு இயக்கம் பொது மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகித்தது. யுத்த காலத்தின்போது நாடு முழுவதும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் அத்தியாவசிய உணவுப் பொருட்களை சமமாகவும் சுமூகமாகவும் விநியோகிக்கும் பாரிய பொறுப்பினைக் கூட்டுறவு இயக்கம் ஏற்றுக் கொண்டது. கூட்டுறவு இயக்கம் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் கறுப்புச்சந்தையை ஒழிக்கலாம் என அரசாங்கம் எண்ணியிருந்தது.

கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு அளிக்கப்பட்டிருந்த பொறுப்புகளை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டன. இச்சங்கங்களின் சாதனைகளில் திருப்தி கொண்ட அரசாங்கம் கிராமியத் துறைக்கு இவற்றின் மூலம் புத்துயிர் அளிக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை உணர்ந்தது. எனவே, 1947ஆம் ஆண்டு கூட்டுறவு கமத்தொழில் உற்பத்தி, விற்பனைச் சங்கங்களை அமைப்பதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டது.

கமக்காரர்கள் கடன் வசதிகளையும், உரம், கிருமிநாசினி போன்றவற்றையும் பெறுவதற்கும், தனிப்பட்ட வியாபாரிகளின் சுரண்டலில் இருந்து தப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திப் பொருட்களை நியாய விலையில் விற்பனை செய்வதற்கும் இச்சங்கங்கள் பெருமளவு துணை புரியும் என அரசாங்கம் நம்பியது.

1957இல் 2126 சங்கங்கள் அமைக்கப்பட்டன. அதே வருடம் ஒவ்வொரு கிராமம் தோறும் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கான கொள்கைத் தீர்மானமொன்றை அப்போதைய கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் எடுத்தார். இத்திட்டத்தின் கீழ் பாவனையாளர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் கடன் வசதிகளையும், உரம், கிருமிநாசினி போன்றவற்றை வழங்குவதற்கும், கமத்தொழிற் கூட்டங்களை ஒழுங்கு செய்வதற்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கெடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனவே, பெருமளவு பாவனையாளர் கூட்டுறவுக் கமத்தொழில் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டன. 1965இல் 755 பாவனையாளர்கள் சங்கங்களும், 589 கூட்டுறவுக் கமத்தொழில் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும், 5053 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தன.

எனினும் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிப் பூரணமாக ஆராய்வதற்காக 1968ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ருேயல் ஆணைக் குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றிய பின்னரே கூட்டுறவுச் சங்கங்களின் நிறுவக அமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. ஆணைக்குழு தனது அறிக்கையில் அப்போது இருந்த 5,818 சங்கங்களில் 983 சங்கங்கள் (மொத்தத் தொகையில் 12 சதவீதம்) இயங்கவில்லை என்றும், 2,984 சங்கங்கள் (மொத்தத் தொகையில் அரைவாசியளவில்) நஷ்டத்தில் இயங்குகின்றன என்றும் குறிப்பிட்டிருந்தது.

அத்துடன் 987 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளர் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்கின்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனவென்றும், 493 சங்கங்கள் கமத்தொழில் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுள்ளனவென்றும் இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதே வேளை 475 கூட்டுறவுக் களஞ்சிய சபைகளும், 46 கூட்டுறவு கமத்தொழில் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும் ஆரம்பத்தில் இயங்கியது போன்று இயங்குகின்றன என்றும், இவை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்படவில்லை என்றும் பிரஸ்தாப அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆதலினுல், கூட்டுறவு துறைக்கு புத்துயிர் அளிப்பதற்கு பெரும் மாற்றங்களை மேற்கொள்வது அவசியம் என அரசாங்கம் உணரத் தொடங்கியது. இம்மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமே கூட்டுறவுத் துறை புத்துயிர் பெறும் என நம்பப்பட்டது.

## ஒன்றிணைப்பு

1970 ஆம் ஆண்டு விசேட சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் ருேயல் ஆணைக்குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. எனவே, ஆணையாளர் நஷ்டத்தில் இயங்கும், சமூகமாக இயங்காத சுமார் ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுகளை ரத்துச் செய்ததுடன், எஞ்சிய சங்கங்களை 372 பாரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக ஒன்றிணைத்தார். இதனுல் சுதந்திரமாக இயங்கி வந்த சிறிய சங்கங்கள் தாய்ச்சங்கங்களின் கிளைகளாக மாற்றப்பட்டன.

கூட்டுறவு நடவடிக்கையில் பலரும் பங்கும் வகிக்கும்முகமாகவும், அங்கத்துவத்தை அதிரிக்கும்முகமாகவும் ஒவ்வொரு அங்கத்தவரினதும் அங்கத்துவக் கட்டணம் ஐம்பது ரூபாவிலிருந்து ஒரு ரூபாயாகக் குறைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாற்றங்களின் பின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வருவாயும், அங்கத்துவமும் குறிப்பிட்டளவு அதிகரித்தது.

1971-75 கால கட்டத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கூட்டுறவுச் சில்லறைக் கடைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகின. 1976இல் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட கூட்டுறவு சில்லறைக் கடைகள் இருந்தன. இவற்றின் ஊடாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வாராந்த மாதாந்த பங்கீட்டு அரிசி, சீனி மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவு வகைகளை நாட்டின் மொத்த சனத்தொகையில் 85 சதவீதத்தினருக்கு விநியோகித்தன. ஏனையோருக்கு அங்கீகாரம் பெற்ற தனிப்பட்ட வியாபாரிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்தக் களஞ்சியங்களின் மூலமாக விநியோகித்தன.

## கமத்தொழிலில்

பாவனையாளர் பொருட்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகிப்பதுடன் கமத்தொழில் நடவடிக்கைகளிலும் பங்கினை வகித்தன. கமத்தொழில் கடன்களை விநியோகித்தல், அவற்றை மீளப் பெறுதல், கமத்தொழில் உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல், பண்ணைகளைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டன.

1976ஆம் ஆண்டில் மொத்தமாக 310 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே இயங்குகின்றன எனக்கண்டு பிடிக்கப்பட்டது தற்போது இத்தொகை 272 ஆகிவிட்டது.

1973 இலும் 1974 இலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வர்த்தக நடவடிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் சங்கங்களின் வருவாயில் 76 சதவீதம் பாவனையாளர் பொருட்களை விநியோகித்ததன் மூலம் கிடைத்தாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதே வேளை, கமத்தொழில் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மூலமாக 20 சதவீத வருவாய் கிடைத்தது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளைப் பொறுத்தளவில் ஆகக்குறைந்த தர்ன விலைத் திட்டங்களின் கீழ் உள்ள உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதே பெருமளவு அடங்குகின்றன.

1974இல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 45 கோடி ரூபா பெறுமதியான நெல்லை நெற் சந்தைப்படுத்தல் சபையின் சார்பில் கொள்வனவு செய்தது. அவ்வருடத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சோளம், குரக்கன், கடுகு, எள்ளு, மிளகாய், உழுந்து, தட்டைப் பயறு, நிலக் கடலை, சின்ன வெங்காயம், பருத்தி, இறப்பர், கிழங்கு, மரக்கறி வகைகள் ஆகியவற்றையும் கொள்வனவு செய்தது. இவற்றின் பெறுமதி ஒரு கோடி 32 இலட்சம் ரூபாயாகும். இவற்றில் சில பொருட்கள் அரசாங்கத்தின் அடிமட்ட விலைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. கோப்பி, மிளகு, சாதிக்காய் போன்ற சில பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவற்றின் தொகையும், பெறுமதியும் குறிப்பிடத்தக்கதல்ல.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்ட இரண்டாவது முக்கிய கமத்தொழில் சேவையானது கமத்தொழிற் கடன்களை வழங்குவதும், அவற்றை மீளப் பெறுவதுமாகும்.

அத்துடன் கமக்காரர்களுக்கு உரம், கிருமிநாசினி, விதைநெல், தெளி கருவிகள் போன்றவற்றை விநியோகிக்கும் பொறுப்பினையும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர, சில கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடைப் பண்ணைகளை நடத்தி வருகின்றன. இப்பண்ணைகள் யாழ்ப்பாணம், கண்டி, பொலன்னறுவை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலேயே உள்ளன.

தற்போது இயங்கும் நிலையிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கமக்காரர்களுக்குப் பல வகையிலும் உதவி செய்கின்றன என்னவோ உண்மைதான். ஆனாலும் அவை தமது நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்தால் கமக்காரர்கள் பயன் அடைவர். நாட்டின் உணவு உற்பத்தி அதிகரிக்கும்.

கிராமிய மட்டத்திலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கமத்தொழில் நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்க முடியும் என்பது ஆராய்ச்சியாளர்கள் முடிவாகும்.

கிராமிய மட்டத்திலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கமத்தொழில் நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்க முடியும் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவாகும்.

# பண்டசாலைப்படுத்தலும், வெப்பநிலையும்

உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலில் பண்டசாலைப்படுத்தலும் ஒரு முக்கிய அம்சம். பண்டசாலைப்படுத்தலின்போது ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் இப் பொருட்கள் பழுதடையாமல் இருக்கும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, சில பொருட்களின் விபரமும், அவை வைக்கப்பட வேண்டிய வெப்பநிலையும் இங்குள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பொருள் | வெப்பநிலை | | எதிர்பார்க்கப்படும் பண்டசாலைப்படுத்தல் காலம் |
|---|---|---|---|
| | oF | oC | |
| அப்பிள் | 30—39 | 1—4— | 3—8 மாதங்கள் |
| வாழைக்காய் | 53—58 | 11.5—14.5 | 10—20 நாட்கள் |
| வாழைப்பழம் | 56 - 61 | 13—16 | 5—10 நாட்கள் |
| தேங்காய் | 32 | 0 | 1—2 மாதங்கள் |
| திராட்சைப்பழம் | 30—32 | —1—0 | 3—5 மாதங்கள் |
| தேசிக்காய் | 46—50 | 8—10 | 3—8 வாரங்கள் |
| மாம்பழம் | 45—50 | 7—10 | 4—7 வாரங்கள் |
| தோடம்பழம் | 30—45 | —1—7 | 1—6 மாதங்கள் |
| அன்னுசிப்பழம் | 40—50 | 4.5—10 | 2—6 வாரங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கமக்காரர்களுக்கான முன்னேடித் திட்டம்

நமது நாட்டில் நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கான போதிய வளங்கள் இருந்த போதிலும் இதுவரை அரிசியில் தன்னிறைவு ஏற்படவில்லை.

நன்கு பயிற்சியளிக்கப்பட்ட, செயல் நோக்கம்கொண்ட, பல வழிகளிலும் உதவிகள் பெறுகின்ற கமக்காரர் சமூகத்தினது ஒத்துழைப்பின் மூலமே உணவில் தன்னிறைவு காணலாம் என ஆய்வாளர்களினுல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது,

இந்த வகையில் எமது அரசாங்கம் கமத்தொழில் அபிவிருத்திக்காகப் பல திட்டங்களைத்திட்டி வருவதுடன் அவற்றைச் செயற்படுத்தியும் வருகின்றது. பொதுவாக சிறு கமக்காரர்களுக்காக அரசாங்கம் பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

கமத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு திட்டங்களைத் தீட்டும்போது அவை அடிமட்டத்திலிருந்தே தீட்டப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரம், ஏனைய திட்டங்களைப் போன்று கமத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களையும் அடிக்கடி பரிசீலனை செய்வதுடன், காலத்திற்குக் காலம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கவேண்டிய கட்டாய நிலையொன்றும் நிலவி வருகின்றது.

கமத்தொழிலில் ஈடுபடும் கமக்காரர்கள் கூட்டு அடிப்படையில் கமச்செய்கையில் ஈடுபடுவதினுல் பலவிதங்களில் நன்மைகளைப் பெறலாம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை கமக்காரர்கள் இதன் மூலம்குறிப்பிடத்தக்க அனுகூலங்களையும் பெற்றிருக்கிருர்கள் எனவே, கமத்தொழிலில் ஈடுபடும் கமக்காரர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட குழுக்களை அமைத்தல் கமக்காரர்களுக்கு நிரந்தரமானதொரு நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு படிக்கல்லாக அமைகின்றதை அறிய முடிகின்றது.

கமக்காரர்கள் ஒன்றிணைந்தாலும் அவர்களுக்கான விநியோகங்களும், சேவைகளும் சரிவர மேற்கொள்ளப்படுவது அவசியமாகின்றது. விநியோகங்கள் என்று கூறுகையில், உரம், தண்ணீர், கிருமிநாசினி, விதை விநியோகம், கடன் வசதி ஆகியவை உள்ளடங்குகின்றன. சேவைகள் என்னும்போது திருந்திய செய்கை முறைகளுக்கான அறிவு, தகவல் ஆகியவற்றை வழங்குதல் எனப் பொருள்படும்.

தற்போது விநியோகங்கள் கமத்தொழில் சேவை நிலையங்கள் மூலமாகவும், சேவைகள் கமத்தொழில் திணைக்களத்தின் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே கமக்காரர்களுக்கு பயிற்சியளிப்பது, கமக்காரர்களைக் கூட்டு முயற்சியில் ஈடுபடுத்துவது, கமத்தொழில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வழிவகுக்கின்றன என்ற உண்மையை உணரமுடிகின்றது அல்லவா?

இவற்றை மனதில்கொண்டே கமக்காரர் தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கவும், சிறு கமக்காரர் குழுக்களை அமைக்கவும் ஒரு முன்னேடித் திட்டம் அரசாங்கத்தினுல் தீட்டப்பட்டுள்ளது இத்திட்டத்தை கமத்தொழில் சேவைகள் நிலையத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமக்காரர்களுக்கு அதிகாரிகள் விளக்கம் அளிக்கிருர்கள்.

கிணங்க கல்கமுவ கமத்தொழில் சேவை நிலையம் அரசாங்கத்திஞல் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள 17 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கல்கமுவவும் ஒன்ருகும். சுமார் 1C0 சதுர மைல்களைக் கொண்ட கல்கமுவவில் 54 ஆயிரம் பேரைக் கொண்ட 11 ஆயிரம் கமக்காரர் குடும்பங் கள் 319 கிராமங்களில் வாழ்கின்றன.

1970ல் எடுக்கப்பட்ட கிராமப் புள்ளி விபரங்களின்படி, இங்கு காணியற்ற 2813 குடும்பங்கள் உள்ளன. அத்துடன் அரை ஏக்கருக்குக் குறைவான காணியைக்கொண்ட 1161 குடும்பங்கள் உள்ளன. இக்குடும்பங் களில் சராசரி 5 - 6 பேர் உள்ளனர். எனவே, ஏறக்குறைய 36 சத வீதத்தினர் காணியற்றவர்களாகவும், சிறிதே அளவு காணி உடையவர்களாகவும் இருக்கின்ற னர்.

படித்த வேலையற்ற வாலிபர்களின் தொகை 11 ஆயிரம் என மதிப்பிடப்பட் டுள்ளது. இங்குள்ளவர்களில் பெருந் தொகையாஞேர் கமத்தொழிலையே மேற் கொள்கின்றனர்.

செம்மையான பயிர்ச் செய்கை முறை யும், அதிக விளைச்சலைத்தரும் நெல்லினங் களும் வேலைவாய்ப்புக்களைப் பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கமத்தொழில் அபிவிருத்தியின் பொரு ட்டு குழு நடவடிக்கைகளை மேற்கொள்வத ஞல் ஏற்படும் அனுகூலங்களை விளக்குமுக மாக கம விதானைமார்களைக் கொண்ட பல கூட்டங்கள் கல்கமுவையில் நடைபெற்றன.

கமத்தொழில் அபிவிருத்தி நீர்ப்பாசன வ்சதியிலும், கடன் வசதியிலுமே பெரும ளவு தங்கியுள்ளது என்றும் —

கமக்காரர்கள் குழுக்களாக இணையா தும், மேற்படி இரு அம்சங்களைம் பரிபா லிப்பதற்கான பொறுப்புக்களை ஏற்காதும் இருந்தால் இவ்விரு அம்சங்களையும் திறமை யாக வழிநடத்த முடியாது என்றும் இக் கூட்டங்களின் போது எடுத்துரைக்கப்பட் டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூட்டத்தின்போது கம விதானை மார்கள் தங்கள் மனதில் எழுந்த சில சந்தேகங்களைக் கேள்விகளாக எழுப்பினர்.

1. குழுக்களாக இணைவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்?

2. இதன் அடிப்படை கொள்கை என்ன?

3. அங்கத்தினர் ஆவதற்கு எவர் எவருக்குத் தகுதியுண்டு?

4. குழுக்களில் அங்கத்தினர்கள் ஆவதன் மூலம் என்னென்ன நன்மைகளை அடையலாம்?

இக்கூட்டங்களில் கம விதானைமார் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட்டனர். அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட எல்லைக்குள் கமக்காரர் குழுக்களை நியமிப்பதில் விருப்பம் தெரிவித்தனர்,

கம விதானைமார் எழுப்பிய சந்தேகங்களுக்குத் தகுந்த பதில்கள் உரிய அதிகாரிகளினால் அளிக்கப்பட்டன. குழு நடவடிக்கைகள் மூலம் சிறந்த அறிவைப்பெறலாம், பெருமளவு மூலதனத்தைப் போடலாம், அதிக லாபத்தைப் பெறலாம் என்ற உண்மைகளை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

இதே போன்ற பல கூட்டங்கள் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் மட்டத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டன. இக்கூட்டங்களில் அரசாங்க அதிகாரிகள், கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் பணிப்பாளர் உட்பட ஏனைய அதிகாரிகள் கமத்தொழில் சேவைகள் ஆணையாளர் போன்ற ஏனைய உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு தமது நோக்கில் கருத்துக்களைத் தெளிவுற வெளிப்படுத்தினர். இவர்களது கருத்துச்கள் சிறு கமக்காரர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்தின. அத்துடன் குழு நடவடிக்கைகள் மூலம் ஏற்கனவே ஏற்பட்ட கசப்பான அனுபவங்களையும், சந்தேகங்களையும் களைவதற்கான வழி வகைகள் குறித்தும் அறியக்கூடிய சந்தர்ப்பம் சிறு கமக்காரர்களுக்குக் கிட்டியது.

இக்கூட்டங்களின்போது குழுக்களில் அங்கம் வகிக்கும் கமக்காரர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. பின்வரும் நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது:-

★ குழுக்கூட்டங்களைக் கிரமமாக நடத்துவது.

★ யாவரும் சிறிய நிதி வைப்பினை மேற்கொள்ளல்.

★ கமத்தொழில் சம்பந்தமான உண்மையான வாழ்க்கைப் பிரச்சினைகளையிட்டு கருத்துப்பரிமாறல்.

★ உற்பத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.

★ சரியான கணக்குகளை வைத்தல்.

இத்திட்டத்திற்கு இணக்கம் தெரிவித்த கம விதானைமார்களின் தொகை குறிப்பிடத்தக்கதாகும். 60 கம விதானைமார்களில் 32 பேர் குழுக்களை உடனடியாக அமைத்து விட்டனர். 20 குழுக்கள் சிறிய சேமிப்புக்களை வைப்புச் செய்துள்ளன. ஏனையவை விரைவில் திட்டங்களைத் தயாரிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளன. கூட்டங்களைக் கிரமமாக நடத்தும் பொருட்டு ஒவ்வொரு கூட்டமும் நடைபெறுவதற்கான திகதிகளை நிர்ணயித்துள்ளன.

கிராம மட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களில் கமக்காரர்களின் வருகை ஊக்கம் அளிப்பதாக இருந்தது. சில கூட்டங்களில் வருகை 96 சதவீதமாகும். எனினும் ஒரு குழு இத்திட்டத்தின் நோக்கத்தைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என எழுத்தில் குறிப்பிட்டுள்ளது. இன்னொரு குழுவின் கூட்டத்தில் 30 சத வீதத்தினரே கலந்து கொண்டனர்.

எது எப்படியிருந்த போதிலும் இந்த முன்னோடித் திட்டம் வெற்றி அளிக்கும் என்ற நம்பிக்கை அதிகாரிகள் மத்தியில் உள்ளது. இந்த நம்பிக்கை வீண் போகா விட்டால் எமது நாட்டின் கமத்தொழில் அபிவிருத்தியில் முதற்படியைத் தாண்டியவர்களாகக் கல்கமுவ கமக்காரர்கள் விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பணிகளில் சர்வோதய இயக்கம்



நமது நாட்டின் கிராமிய முன்னேற்றம் தொடர்பாக ஆக்கப்பணிகளில் அரசாங்க சார்பற்ற பல நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன இந்த ரீதியில் சர்வோதய சிரமதான இயக்கம் கிராமங்களில் குறிப்பிடத்தக்க பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சர்வோதய சிரமதான இயக்கம் 1958ம் ஆண்டு ஆரம்பமானது. புதியதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்குச் சமுதாயத்திலும், மனிதனிலும் இரத்தம் சிந்தாத முழுமையான புரட்சியை மேற்கொள்ளுவதையே இவ்வியக்கம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அரசாங்கம் அங்கீகரித்த தொண்டுத்தாபனமாகும்.

இவ்வியக்கம் ஒழுங்கு செய்துள்ள சிரமதான இயக்கம் இலங்கையில் மொத்தமாகவுள்ள இருபத்திரண்டாயிரம் கிராமங்களுள் ஏறக்குறைய ஆயிரம் கிராமங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வியக்கம் தனது நோக்கங்களையடைவதற்காக பின்வரும் முறைகளைப் பின்பற்றுகிறது:-

★ சிரமதான முகாம்களை அமைத்தல். இவற்றில் சர்வோதய தொண்டர்கள் கிராமங்களில் முகாமிட்டு கிராமத்தில் அபிவிருத்திற்காக கிராம மக்களுடன் சேர்ந்து பணிபுரிதல்.

★ மக்களின் கல்வி, சுகாதாரம், பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகத்திறமை ஆகிய விடயங்கள் சம்பந்தமாக துரித சன சமூக அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ளல்.

★ அவரவர் வளர்ச்சிக்காக வேறுபட்ட கிராம, நகர சமூகத்தவர்களை ஒன்றுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வெவ்வேறு நாடுகளிலுள்ள மக்களை ஒன்றுபடுத்தி பரஸ்பர ஒத்துழைப்பை நல்குதல்.

## நிர்வாகம்

சர்வோதய இயக்கத்தின் நிர்வாகம் 35 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அங்கம் வகிக்கும் 20 பேர் 25 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களாகவிருப்பர். இயக்கத்தின் நடவடிக்கைகளில் இளைஞர்களைப் பெருமளவு ஈடுபடுத்துவதிலேயே இயக்கம் அதிக கரிசனை காட்டுகிறது. அத்துடன் இளைஞரே நிருவாக சபைக் கூட்டங்களில் பெரும்பங்கு வகிக்க வேண்டும் எனவும் இயக்கம் விரும்புகிறது.

இயக்கத்தின் உத்தியோகத்தரும், வெளிக்கள உத்தியோகத்தர்களும் தொண்டு அடிப்படையிலேயே தமது பணிகளை மேற்கொள்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் பல்கலைக் கழக பட்டதாரிகளாவர். ஆசிரியர்கள், சிரேஷ்ட கல்லூரி மாணவர்கள், பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அரசாங்க தனியார் உத்தியோகத்தர்கள், பௌத்த பிக்குகள் ஆகியோரும் இதில் அடங்குவர்.

## சிறுவர் குழு

சர்வோதய கிராமமொன்றில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள குழுக்களில் சிறுவர்களின் குழு முதன்மை ஸ்தானத்தை வகிக்கிறது. 3 1/2 வயது முதல் 7 வயது வரையிலான பிள்ளைகள் சர்வோதய இயக்கத்தினால் நடத்தப்படும் கல்வி நிலையத்தில் கல்வி கற்க வசதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையத்திலும் ஆசிரியர் ஒருவர் கடமையாற்றுவார். வறிய மாணவர்களுக்கு உடையும், புத்தகங்களும் வழங்கி அவர்களுக்கு சிறந்த கல்வியறிவை ஊட்டுமுகமாகவே இந்நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர இப்பிள்ளைகளுக்காக கல்விச் சுற்றுலா, பொருட்காட்சிகள், சமய வகுப்புகள் ஆகியவற்றையும், அங்கவீனமான பிள்ளைகளுக்காக நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ளவும், பிள்ளைகளின் பண்ணைகளை ஒழுங்கு செய்யவும், வீட்டுத் தோட்டத் திட்டங்களுக்கு உதவியளிக்கவும், சமூக கலாச்சார பொழுதுபோக்கு நடவடிக்கைகளை முன்னேற்றவும் ஏற்ற நடவடிககைகளை மேற்படி இயக்கம் மேற்கொள்கிறது.

## தாய்மார் குழு

சர்வோதய கிராமங்களில உள்ள இரண்டாவது குழு தாய்மார் குழுவாகும். இக்குழு பிள்ளைகளை வளர்த்தல், இல்லங்களைத் திருத்தியமைத்தல், சமயப் பணிகள், குடும்ப வருவாயை அதிகரிக்க நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

## இளைஞர் குழு

மூன்ருவது குழு இலைஞர் குழுவாகும். இதில் 15 - 30 வயதுக்குட்பட்ட இரு பாலாரும் அங்கம் வகிக்கின்றனர். தொழில் முன்னிலைப் பயிற்சி, கிராமிய கைத்தொழில்களுக்குத் தேவையான திறமைகளைப் பெறுதல், பிள்ளைகளுக்கான நூலகம், முதியோர் கல்வி ஆகிய விடயங்களுடன் 'இக்குழு தொடர்பு கொண்டுள்ளது.

## கமக்காரர் குழு

நான்காவது குழு கமக்காரர் குழு என அழைக்கப்படுகிறது. குறிப்பாக நெற்செய்கையை மேற்கொள்ளும் கமக்காரர்களுக்கிடையேயும், பொதுவாக ஏனைய கமக்காரர்களுக்கிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்துவதையே இக்குழு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

கமத்தொழில் மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரித்தல், கமக்கார சமூகத்தினுல் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாரம்பரிய வைபவங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் உயிரூட்டல், கமத்தொழிற் கொள்கை வகுப்பதில் பங்கெடுப்பதற்கான உரிமைகளையும், சுதந்திரத்தையும் உணரச்செய்தல் ஆகியவையும் இக்குழுவின் நோக்கங்களில் அடங்கும்.

ஐந்தாவது குழுவில் கிராமத்தில் உள்ள ஏனைய வயதானவர்கள் அடங்குவர்.

கிராமியப் பணி மன்றம் அல்லது கிராமோதய சபையே இந்த 5 குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இச்சபையே கிராமத்தின் சகல அபிவிருத்திக்கும் பொறுப்பாகும்.

சர்வோதய சிரமதான முகாம்கள் மூலமாகவே கிராமத்து அடிமட்டத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிரமதான முகாம்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளில், கிராமங்களுக்கு வாகனங்களில் செல்லும் பொருட்டு வீதிகளை அமைத்தல், கிராம நீர்ப்பாசன குளங்களையும், வாய்க்கால்களையும் புனரமைத்தல், நெற்செய்கையின்போது உழுதல், நாற்று நடுதல், களை பிடுங்குதல், அறுவடை செய்தல் சூடு மிதித்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு சரீர உழைப்பை அளித்தல் மரக்கறிச் செய்கை, பழச் செய்கை போன்றவற்றுக்கு உதவி அளித்தல், கமச்செய்கைக்காகப் புதிய காணிகளை அமைத்துக்கொடுத்தல், குடிசைக் கைத்தொழில், வீட்டுக்கைத் தொழில் ஆகியவற்றை ஆரம்பிக்க உதவி அளித்தல், செலவீனம் குறைந்த வீடுகளை அமைத்தல் போன்றவையும் அடங்கும்.

மொறட்டுவையில் உள்ள சர்வோதய தலைமைப் பீடத்தில் இவ்வியக்கமானது பல விதமான பயிற்சிகளை அளிக்கின்றது, கமத்தொழில், தச்சுவேலை, இரும்பு வேலை, மூங்கில், கதிரை பின்னும் வேலை, கைப்பணி, சித்திரம், 'பட்டிக்' சாயமிடுதல் போன்ற பல பணிகளில் இங்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவை தவிர, அபிவிருத்திக் கல்வி சம்பந்தமான கருத்தரங்குகளும் இங்கு நடத்தப்படுகின்றன.

## பண்ணைகள்

சர்வோதய இயக்கம் சுமார் 22 கிராமங்களில் பண்ணைகளை நடத்துகிறது. கொழும்பில் இருந்து 167 மைல் தூரத்தில் உள்ள தனமல்வில என்ற இடத்தில் 500 ஏக்கர்களைக் கொண்ட பண்ணை ஒன்றுள்ளது. இப்பண்ணைகளிலும் மேற்சொன்ன பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கம் ஆரம்பிக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும், சர்வோதய இயக்கம் ஆரம்பிக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லையென ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். எனவே, சர்வோதய கிராமங்களில் பலதரப்பட்ட அரசாங்கத் திணைக்களங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக சர்வோதய இயக்கம் தனித்தே செயல்படுகிறது.

இவ்வியக்கம் கிராமப் புறங்களில் கணிசமான அளவு சேவைகளை நல்கிய போதும் நமது நாட்டின் கிராமிய அபிவிருத்திப் பணி நிறைவேற்றத்துக்கும், கொள்கை வகுத்தலுக்கும் உட்படாததாக விளங்குகிறது. சிற்றாறுகள் ஒன்றாகக் கலக்கும் போதுதான் ஒரு நதியே உருவாகிறது என்பதைப் போல் கிராம அபிவிருத்தியில் பங்கெடுக்கும் இவ்வியக்கத்தின் பணிகளும் தேசிய அபிவிருத்திப் பணிகளுக்குள் அடக்கப்பட்டால் அரசாங்கமும், இயக்கமும் இணைந்து செயல்பட முடியும்.

---

**உணவுச் செலவில் 10% மரக்கறிக்கு**

★ இலங்கையில் சராசரியாக ஒரு குடும்பத்தின் மாதாந்த உணவுச் செலவினத்தில் மரக்கறிகளுக்காக 10 சத வீதம் செலவாகிறது.

★ இலங்கையின் வருடாந்த மரக்கறி உற்பத்தி சுமார் 6 லட்சம் தொன்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வருடந்தோறும் மரக்கறிகளுக்காக 3 லட்சம் ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு அவரையின் மகத்துவம்

## சமீபகால வரலாற்றுக் குறிப்பு

1975ம் ஆண்டிற்குப் பின்னர் பிரபலத்துக்கு வந்த அவரையின வகைகளில், சிறகு அவரைக்கு விஞ்ஞானிகள் மத்தியிலும் திட்டமிடல் அதிகாரிகளின் மத்தியிலும் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் 'விங்ட் பீன்' (Winged Bean) என அழைக்கப்படும் இந்த அவரைக்கு இலங்கைத் தமிழ் மொழி பேசுவோர் மத்தியில் 'செட்டை போஞ்சி', 'காப்புலி அவரை' என்னும் பெயர்களும் வழங்கப்படுகின்றன. தமிழ் நாட்டில், இதே அவரைக்கு, "முறுக்கு அவரை" என்னும் பெயர் வழக்கிலுள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் மூன்ரும் உலக நாடுகளிலே மிகுந்து காணப்படும் புரதக் குறைபாடு, சக்திக் குறைபாடு போன்ற போஷாக்கு நோய்களின் பாரிய பாதிப்பைத் தவிர்ப்பதற்கு இயற்கை அன்னை அளித்துள்ள வரப்பிரசாதமென சிறகு அவரையை உலக மட்டத்தில் விஞ்ஞானிகள் புகழ்கின்றனர்.

தற்போது பிரபலமாக உள்ள சோயா அவரை சிறகு அவரையானது பல போஷாக்கு இயல்புகளில் ஒத்துள்ளது. ஆனால், சிறகு அவரையானது உணவாகப் பயன்படக்கூடிய கிழங்கை உருவாக்கக் கூடிய தன்மையைப் பெற்றிருப்பது, சோயா அவரையிலிருந்து சிறகு அவரைம் முக்கிய சிறப்பம்சமாகும்.

சிறகு அவரையின் போஷாக்குரிய சிறப்பம்சங்களை அறிந்து, விவசாயத்துறையில் அதன் முக்கியத்துவத்தை முன்வைத்தவர், ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியரான மேஸ்பீல்ட் என்பவராவர். அவரையினத் தாவரங்கள் யாவும் பற்றீரியங்கள் மூலம் காற்றிலுள்ள நைதரசனை மண்ணில் பதிக்கக்கூடிய திறமை பெற்றவை என்பது யாவரும் அறிந்ததே. ஆனல், இந்தச்சிறகு அவரையின் வேர்க்கணுக்களிலே நைதரசன் பதிக்கும் பற்றீரியங்களின் நாட்டம் அதிகமாயுள்ளதெனவும், இதுவே சிறகு அவரை விதைகளிலும் கிழங்குகளிலும் புரதச்சத்து பெருமளவு காணப்படுவதற்கு காரணமாக இருக்கலாம் எனவும் சில கருத்துக்களை மேஸ்பீல்ட், 1960ம் ஆண்டில் வெளியிட்ட தனது ஆய்வுக்கட்டுரையில் தெரிவித்திருந்தார். தொடர்ந்து, 1973ம் ஆண்டில் வெளியிட்ட "நாளைய உலகப் பயிர்-சிறகு அவரையா?" என்னும் இன்னெரு ஆய்வுக் கட்டுரையில், சிறகு அவரையின் விவசாயத் துறை முக்கியத்துவங்களை மேலும் புலப்படுத்தினர்.

### சச்சி ஸ்ரீகாந்தா

1975ம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள தேசிய விஞ்ஞான அக்கடமியானது, "வெப்ப வலயப் பிரதேசத்தின் உயர் புரதப்பயிர் சிறகு அவரை" எனுந் தலைப்பில் ஒரு புத்தகக்கையேட்டை வெளியிட்டது. இந்தக் கையேடு வெளியான பின்னர், உலகெங்குமுள்ள விஞ்ஞானிகள் சிறகு அவரைப் பயிரைப் பற்றித் தீவிரமாக ஆராயத் தொடங்கினர்.

கடந்த ஐந்து ஆண்டு காலமாக, மூன்ரும் உலக நாடுகளிலேயுள்ள பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், தொழிலுற்பத்தி நிறுவனங்கள் பலவற்றில் பணிபுரியும் விஞ்ஞானிகள், சிறகு அவரைப் பயிரின் பரம்பரை மூலவுயிர் சேகரிப்பு, உடற்றெழிலியல், பயிர் வளர்ப்பு பயிரின் பீடைநோய்ப் பாதுகாப்பு, பயிரின் பல்வேறு பகுதிகளில் போஷாக்குச் சத்துக்களின் கணிப்பீடு போன்ற பல்வேறு அம்சங்களில் தமது கவனத்தைச் செலுத்தி வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1978ம்** ஆண்டில் பிலிப்பைன்ஸ் தேசத்து மணிலா நகரில், முதலாவது சர்வ தேச சிறகு அவரை ஆய்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. இச்கருத்தரங்கில் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற ஐந்து கண்டங்களிலுமுள்ள 28 நாடுகளிலிருந்து சிறகு அவரையில் ஆய்வு நடத்தி வந்த59 விவசாயத் துறை நிபுணர்களும் விஞ்ஞானிகளும் கலந்து கொண்டனர். சிறகு அவரைப் பயிரின் பல்வேறு குணதிசயங்களும் இந்த அவரையிலிருந்து உணவாகப் பெறக்கூடிய விதைகள், கிழங்குகள், இலைகள், பூக்கள், முதிராத உறையங்கள் போன்றவற்றின் போஷாக்கு நிறைவம்சங்களும் இந்தக் கருத்தரங்கில் விஞ்ஞானிகளால் முன்வைக் கப்பட்டன. இவற்றிலே சிறகு அவரைப் பயிரின் சிறப்பம்சங்களைச் சுருக்கமாகப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்.

(1) மனிதனால் பயிரிடப்படும் எந்தப் பயிரிலும் பார்க்க, ஒப்பிட்டளவிலே ஓர் அலகு பரப்பில் கூடியளவு பயன்படக்கூடிய புரதச் சத்தை அளிக்ககூடிய திறமை சிறகு அவரைக்கு உள்ளது.

(2) மனிதனுக்கு நேரடி உணவாகவும், கால்நடை விலங்குகளுக்குத் தீனியாகவும், மேலும் உற்பத்தித் துறையில் பயன்படக்கூடிய மூலப்பொருட்களைத் தரக்கூடிய தாவரமாகவும் சிறகு அவரை சிறந்து விளங்குகின்றது.

(3) சிறகு அவரைப் பயிரின் உறையங்கள் நான்கு பக்கங்களைக் கொண்டு, சிறப்பம்சமான ''சிறகுகடன்'' நாற்சதுர அமைப்பில் அமைந்துள்ளன. இவை 2—4 அங்குலம் வரை வளர்ந்து, ஒவ்வொரு உறையமும் 5—20 விதைகளைக் கொண்டதாக அமையும். சில குறிப்பிட்ட பயிர் வகைகளில் உறையங்கள் ஒரு அடி நீளத்துக்கு மேடான்னதாகவும் அமைகின்றன. தற்போதைய கமச் சூழலில் ஏக்கருக்கு 1,500 இருத்தல்கள் என்னும் அளவில் விளைவு பெறப்படலாம்.

(4) சிறகு அவரைப் பயிரின் எல்லாப் பகுதிகளும் உணவாகப் பயன்படக் கூடியதாக உள்ளன. முக்கியமாக விதைகளில் 30—42% புரமும், 11—23% கொழுப்பும் காணப்படுதல் கவனத்திற் கொள்ள வேண்டிய தொன்றும். மேலும், சிறகு அவரையில் கிழங்குகளும், மற்றைய கிழங்கு வகைகளான உருளைக்கிழங்கு, மரவள்ளி, கரட், பீற்றூட் போன்றவற்றுடன் ஒப்பிடுகையில் 4—8 மடங்கு அதிகளவு புரதச் சத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பதும் பொதுமக்களுக்குப் பிரபலப்படுத்த வேண்டியதொன்றும்.

(5) அவரையினத் தாவர வகையாதையால், சிறகு அவரையை சுழற்சி முறையில் பயிரிடுகையில் நிலத்திற்குத் தேவையான நைதரசன் பசளையை நாட்டுவதிலும் சிறகு அவரை மேலோங்கி நிற்கின்றது.

1979ம் ஆண்டில், இலங்கை அரசாங்கமும் சிறகு அவரையை விவசாயிகளிடையே பிரபலமாக்குவதில் கூடிய கவனத்தை எடுத்தது. இலங்கையில் விவசாயத்துறை நிபுணர்களில் சிறகு அவரையில் ஆய்வு ஈடுபாடு கொண்ட விஞ்ஞானிகள் சிலரைக் கொண்ட ''வழிகாட்டு குழு' அமைக்கப்பட்டு, இக்குழுவானனது, ''இலங்கையில் சிறகு அவரை அபிவிருத்தித் திட்டம்'' பற்றிய அறிக்கையை இலங்கை ஜனாதிபதிக்கு ஜுன் 1979ல் கையளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கமநலம் செய்தி முனை

நகரில் வீசப்படும் குப்பைகளிலிருந்து உரத்தைத் தயாரிப்பது குறித்து தற்போது ஜப்பானிய குழுவொன்று ஆராய்ந்து வருகின்றது.

இந்த ஆராய்ச்சி கொழும்பு, கண்டி, குருநாகல் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படும். குப்பைகள் எவ்வாறு சேர்க்கப்படுகின்றன; அவற்றில் உள்ள கழிவுகள் என்ன என்பன குறித்து இக்குழு விரிவாக ஆராயும்.

## நீர்ப்பாசனத் திட்டங்கள்

குளம் புனர்நிர்மான, அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 22 பாரிய பாசனத் திட்டங்களும் 385 சிறிய பாசனத் திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இத்திட்டங்களுக்கென உலக வங்கி 90 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கவுள்ளது.

| திட்டங்கள் வருமாறு:- | | பாரியவை | சிறியவை |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மாவட்டம் | 6 | 40 |
| யாழ். | ,, | 9 | 40 |
| முல்லைத்தீவு | ,, | — | 60 |
| மன்னார் | ,, | — | 60 |
| வவுனியா | ,, | 2 | 100 |
| திருகோணமலை | ,, | 5 | 95 |

இத் திட்ட வேலைகள் அடுத்த ஜூனில் ஆரம்பமாகும்.

## நீர்ப்பாசன வசதி

அரசாங்கத்தின் இடைத்தவணை மூலதனத் திட்டத்தின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சு அடுத்த வருடம் 9100 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கிராம விஸ்தரிப்புக்காக 50,000 ஏக்கர் காணியை அமைச்சு ஒதுக்கும். அத்துடன் காடு வளர்க்கும் திட்டத்தை 300 ஏக்கர்களில் இருந்து 41,000 ஏக்கர்களாக அதிகரிக்கும்.

பாரிய குடியேற்றத் திட்டங்களின் கீழ் 892 குடும்பங்களை குடியேற்றவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

## கூட்டுறவாளர்கட்குப் பயிற்சி

கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு பயிற்சி நெறிகளை மேற்கொள்வது குறித்து உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சு ஆராய்ந்து வருகிறது. இதன் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும். இப் பயிற்சி நெறிகளை கூட்டுறவு முகாமைத்துவ சேவைகள் நிலையம் மேற்கொள்ளும்.

## மரமுந்திரிகை பதனிடும் தொழிற்சாலை

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் புத்தளத்தில் மரமுந்திரிகை பதனிடும் புதிய தொழிற்சாலையொன்றை நிறுவவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆயிரம் வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கலாம் எனக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கிறது. தொழிற்சாலை நிருமானத்திற்கான மதிப்பீடு 5 இலட்சம் ரூபாவாகும்.

இதே வேளை, மரமுந்திரிகை உற்பத்தியாளர்களுக்கு தற்போது வழங்கும் மானியங்களை அதிகரிக்கவும் அரசாங்கம் முன்வந்துள்ளது.

## புதிய இன நெல்

ஓர் ஏக்கருக்கு இருநூறு புசல் உற்பத்தி செய்யக்கூடிய புதிய வகை நெல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த நெல்லினம் இந்தப் பெரும் போகத்தின்போது முதல் முறையாக அறிமுகம் செய்யப்படும்.

## நஷ்ட ஈடு

வயல்களில் அத்துமீறித் திரியும் கால் நடைகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்திற் கான நஷ்டஈடு உடனுக்குடன் அறவிட்டுக் கொடுக்கப்படும்.

இதற்கான 1979ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டத்தின் 39ஆம், 43ஆம் பிரிவுகள் தீவிரமாக அமுல் நடத்தப்படவிருக்கின்றன.

இச்சட்டத்தின்படி அத்துமீறிப் பிரவே சிக்கும் கால்நடைகள் உடனுக்குடன் பிடித் துக் கட்டப்படும். 48 மணி நேரத்துக்குள் கால்நடைச் சொந்தக்காரர் அவற்றால் ஏற் பட்ட சேதத்திற்கான நட்டஈட்டையும், பராமரிப்புச் செலவையும் பயிர்ச் செய்கை உத்தியோகத்தரிடம் செலுத்தி கால்நடை களையும் மீட்டுக் கொள்ள வேண்டும் கால் நடை ஒன்றுக்கு 25 ரூபா வீதம் குற்றப் பணமும் கட்ட வேண்டும்.

## நோய்கட்குத் தாக்குப் பிடிக்கும் நெல்லினம்

கிருமிநாசினிகளின் உதவியின்றியே பல வகை நோய்களுக்கும் தாக்குப் பிடிக்கக் கூடிய விதை நெல்லைப் பெருமளவில் உற் பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோ கிக்க கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச் சுத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத் துள்ளது.

இது அதிக விளைச்சலையும் தருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டிலுள்ள சுமார் 500 விவசாயி களைத் தெரிவு செய்து அவர்களுக்கே முத லில் இந்த புதிய விதை நெல்லை வழங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

## கிழங்கு இறக்குமதித் தடை

உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கைக் குத் தேவைவான விதை உருளைக் கிழங்கு 1981இல் இறக்குமதி செய்யப்படுவது முற் றாக நிறுத்தப்படும்.

தேவையான விதை உருளைக் கிழங்கு முழுவதும் இனிமேல் உள்ளூரிலேயே உற் பத்தி செய்யப்படும்.

## அநுராதபுரத்தில் உரக் களஞ்சியம்

இரண்டாயிரம் தொன் உர வகை களைச் சேமித்து வைக்கக்கூடிய பிரமாண்ட மான உரக் களஞ்சியம் ஒன்று அநுராதபுரத் தில் நிருமானிக்கப்படவுள்ளது,

## கொள்வனவுப் பிரிவு

மிளகாய், வெங்காயம், உளுந்து, உரு ளைக் கிழங்கு, எள்ளு போன்ற உப உணவுப் பொருட்களை விவசாயிகளிடமிருந்து நேரடி யாகக் கொள்வனவு செய்வதற்குத் தனி யான கொள்வனவுப் பிரிவு ஒன்று அமைக் கப்படவிருக்கின்றது.

கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சித் துறை அமைச்சு இதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது.

உப உணவுப் பொருட்களைக் கொள் வனவு செய்வதற்கான தனிப்பிரிவு ஆரம் பத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையின் கீழ் அமைக்கப்படும். நாளடைவில் அது நெல் சந்தைப்படுத்தும் சபையின் நிர்வாகத்தி லிருந்து பிரிக்கப்பட்டு தனியொரு பிரிவாக மாற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தியில் கிராம அபிவிருத்திச் சபைகளின் பங்கு

இந்நாட்டுக் கிராமமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமுகமாக அரசாங்கத்தின் ஆதரவுடன் கிராம அபிவிருத்தி இயக்கம் செயல்பட ஆரம்பித்தது. கிராமிய அபிவிருத்தித் திட்ட தொழிற்பாட்டின் நிமித்தம் 1940ம் ஆண்டு வர்த்தக கைத்தொழில் திணைக்களத்தில் கிளையொன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் சில தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கிராமசேவை நிலையங்கள் தாபிக்கப்பட்டன. இவற்றில் கருமமாற்றுவதற்கென கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டார்கள். 1940ம் ஆண்டு இத்தகைய நிலையங்கள் எழுபது இருந்தன.

இந்நிலையங்களைத் திறம்பட இயக்க வைக்கும் நோக்கமாக கிராமிய அபிவிருத்தி திணைக்களம் என்ற பெயரில் புதியதொரு திணைக்களம் 1948ம் ஆண்டு நிறுவப்பட்டது. இதேவேளை, கிராமிய சேவை நிலையங்களுக்குப் பதிலாக கிராம அபிவிருத்தி சபைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன.

கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளை மக்கள் துணையுடன் மேற்கொள்வதற்கு இச்சபைகளினூடாக தொடர்பு ஏற்படுத்துவதே இத்திணைக்களத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

கிராமத்தின் சமூக, பொருளாதார கலாச்சார துறைகளின் அபிவிருத்திக்கு சுய உதவியை உபயோகிக்க வேண்டும் என்ற கோட்பாடு கிராமிய அபிவிருத்தி இயக்கத்தின் அணுகு முறையாக விளங்குகின்றது.

இதே வேளை கிராம அபிவிருத்தி தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இச்சபைகள் கிராமிய நலன்களைக் கவனிக்கும் பணியில் ஈடுபடும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு ஒரு பயனுள்ள களமாகவும் சேவையாற்றுகின்றன.

அரசாங்கத்தின் திட்டங்கள் தொடர்பிலான தகவல்களைப் பரப்பும் அதேவேளையில், இச்சபைகள் அபிவிருத்தித் திட்டங்களைக் கூட்டு அடிப்படையில் நிறைவேற்ற கிராம மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுள்ளது.

## குழுச் சபைகள்

1948 டிசம்பரில் அதிகரித்துவரும் சபைகளை மேற்பார்வை செய்யுமுகமாக குழுச் சபைகள் அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இக்குழுச்சபைகள் பயனுள்ளதாக இயங்கிய போதிலும் காலப்போக்கில் அதன் இயக்கம் மந்த கதியை அடைந்தது.

1951 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி சபைகளை மறுசீரமைக்கவும், வலிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் சபைகளின் பிரதிநிதிக்கு திணைக்களத்தின் பத்து மாகாணப்பயிற்சி நிலையங்களில் பயிட்சியளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## மகளிர் சபை

1952 இல் பெண்கள் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளுமுகமாக மகளிர் [மாதர் சங்கம்] சபைகளை கிராமிய அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பித்தது. 1954இல் கிராமிய அபிவிருத்தி இயக்கத்தின் கொள்கைகளுக்கு அமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல மகளிர் சபைகளுக்கும் கிராமிய அபி விருத்தி திணைக்களம் நிதியுதவி வழங்கியது.


1955 இல் கிராமிய அபிவிருத்தித் திணைக் களம் குடிசைக் கைத்தொழில் திணைக்களத்து டன் இணைக்கப்பட்டு கிராமிய அபிவிருத்தி சிறுகைத்தொழில் திணைக்களம் எனப் பெயரி டப்பட்டது. அப்போதிருந்து இன்றுவரை கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்ப த்தில் மேற்கொண்ட திட்டங்களும், கொள் கைகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனிடையே ஆயிரம் கைத் தறி நெசவு நிலையங்களை அமைப்பதற்குத் திட்டமொன்று தீட்டப்பட்டது.

குடிசைக் கைத்தொழிற் திட்டங்கள் கிராம அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு உதவும் என எண்ணப்பட்ட போதும் கிராம அபிவிருத்தியுடன் சிறுகைத்தொழில்களை இணைத்தமை கிராமிய அபிவிருத்தித் துறை யை நலிவு படுத்தியது. சிறுகைத்தொழில்க ளைப் பேணுவதற்காக அதிக நேரமும், நிதி யும் செலவிடப்பட்டதனால் கிராமிய அபிவி ருத்தி சபைகளின் முக்கிய நோக்கங்கள் மறைக்கப்பட்டன. எனினும் கிராம அபிவி ருத்திச் சபைகள்கிராமிய கைத்தறி நெசவு நிலைய கட்டிடங்கள் நிருமாணத்தில் முக்கிய பங்கை வகித்தன. இதன் பொருட்டு கட்டி டத்துக்காகும் 75சதவீத செலவீனம் திணைக்க ளத்திடமிருந்து உதவியாக கிடைத்தது.

1970 ஆம் ஆண்டில் கிராம அபிவிருத்தி சிறுகைத்தொழில் திணைக்களம் மீண்டும் கிராமிய அபிவிருத்தி திணைக்களமாக்கப்பட் டது.

இத்திணைக்களம் ஆரம்பமுதல் தற் பொழுது வரை கிராமிய அபிவிருத்திச் சபை களுக்கு கிராமிய மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கும் தாபனம் என்ற ரீதியில் உரிய இடத்தையும், உதவியையும் அளித்து வருகிறது.

இதுவரை கிராமிய அபிவிருத்தி சபைக ளில் பலதரப்பட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. திணைக்களம் 1956, 1957 இல் வெளியிட்ட நிருவாக அறிக்கைக ளின் பிரகாரம் இச்சபைகள் சுகாதாரம், கல்வி, கமத்தொழில், நிதி, மதம், கலாச் சாரம், பொருளாதாரம், அபிவிருத்தி போன்ற துறைகளில் பங்கெடுத்துள்ளதை அறிய முடி கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973இல் திணைக்களம் கிராமிய அபிவிருத்திச் சபைகளையும், மகளிர் சங்கங்களையும் மீளப் பதிவு செய்யும் பணியினை மேற்கொண்டது. 1975 செத்தெம்பர் 30ஆந் திகதி வரை 2483 கிராம அபிவிருத்தி சபைகளும், 335 மகளிர் சபைகளும் பதிவு செய்யப்பட்டன. 1978இல் அரசாங்கத்தின் அங்கீகாரமின்றி 337 கிராம அபிவிருத்தி சபைகளும், 3200க்கு மேற்பட்ட மகளிர் சபைகளும் இயங்கி வந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிராமிய அபிவிருத்திச் சபைகள் கிராமங்களில் மேற்கொண்ட பணிகள் கிராமிய மக்களின் மனோநிலையிலும், விருப்பு வெறுப்புக்களிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிராமிய அபிவிருத்திச் சபையானது பலதரப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கையில் பரந்தளவில் பங்கினைச் செலுத்துகிறது. இச்சபைகள் கிராமத்தின் பொருளாதார சமூக, கலாச்சார, நடவடிக்கைகளின் மேம்பாட்டில் பங்கு செலுத்துகிறது. இதனால் சில அரசாங்கத் திணைக்களங்கள் இவற்றின் அனுசரணையுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட பணிகளை வேறு சில திணைக்களங்கள் இச்சபைகளின் ஆதரவுடன் மேற்கொள்கின்றன எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் கிராமிய அபிவிருத்தி சபைகளினூடாக மக்கள் தமது கிராமங்களை கட்டி எழுப்புவதற்குத் தமது முயற்சிகளை நல்கும் பொருட்டு கிராம அபிவிருத்தித் திணைக்களம் இச்சபைகளுக்கு ஊக்கமளித்து வருகிறது.

மக்கள் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கையில் பங்கெடுத்ததற்காக அவர்களுக்கு கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் பயிற்சி அளித்து வருகிறது. இதன் பொருட்டு பயிற்சித் திட்டங்கள் திணைக்களத்தின் பத்துப் பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு வருடந்தோறும் கிராமிய அபிவிருத்தி சபைகளின் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

## கிராமாபிவிருத்தி இயக்கத்தின் நோக்கங்கள்

கிராமிய அபிவிருத்தி இயக்கத்தின் நோக்கங்களை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:-

1. கிராமிய மக்களால் அமைக்கப்பட்ட கிராமிய நிறுவனங்களூடாக அவர்களின் சமூக, பொருளாதார, களாச்சார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு ஊக்கத்தையும், விடாமுயற்சியையும் ஏற்படுத்தல்.

2. இவ்வாறான பகுதிகளில் பணிபுரியும் அரசாங்க சேவை நிறுவகங்களுக்கும், மேற்படி நிறுவகங்களுக்கும் இடையில் தொடர்பையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்தல்.

இந்த நோக்கங்களை அடைவதற்காக திணைக்களம் பின்வரும் ஆக்கப் பணிகளை மேற்கொள்கிறது:-

1. ஆண்களையும், பெண்களையும் கொண்ட கிராமிய அபிவிருத்திச் சபைகளை அமைத்தல்.

2. கிராமிய மட்ட நிறுவகங்களின் பிரதிநிதிகள், கிராமிய மட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு சனசமூக அபிவிருத்தியில் பயிற்சி அளித்தல்.

3. கிராமிய அபிவிருத்தி சபைகள் ஆரம்பித்த சுய உதவி அடிப்படையிலான பணிகளுக்கு உதவியளித்தல்.

4. சிறிய பாசனக் குளங்களை சிரமதான அடிப்படையில் புனரமைப்பதற்கு வேண்டிய உதவிகளை அளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. விசேட அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவகங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

9. கிராமிய மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக கிராமப் பெண்களுக்கு விற்பனை, பயிற்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்; நடத்துதல்.

7. கிராமிய மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட குடும்ப நலத் திட்டத் திட்டங்களுக்கு உதவியளித்தல்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களை அபிவிருத்தி செய்ய ஊக்கமளித்தல்.

இந்த வகையில் திணைக்களத்தின் உதவிகளைப் பெறும் கிராமிய அபிவிருத்திச் சபைகள் கமத்தொழில் துறையில் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது,

*இச்சபைகள் கமக்காரர்கள் மத்தியில் யில் அதிக உற்பத்தியை அளிக்கும் நெல் வினங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அத்துடன் செம்மையான முறையில் உரமிடுதல், களை பிடுங்குதல், நாற்று நடுதல் ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

*உப உணவுப் பொருட்களின் செய்கை முறையிலும் இச்சபைகள் தமது உதவிகளை நல்கியுள்ளன. கிழங்கு வகைகள், மரக்கறிகள், மிளகாய், கொடித்தோடை, சோயா போன்றவை உப உணவுப் பொருட்களில் அடங்கும்.

*பாற்பண்ணையிலும், கோழி வளர்ப்பிலும் இச்சபைகள் பெருமளவு பங்கு கொண்டுள்ளன.

இவை தவிர நீர்ப்பாசன குளங்களைப் புனரமைத்தல், சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல், கைப்பணி கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிலும் சபைகள் பெரும் பங்கினை வகிக்கின்றன.

கிராமங்களின் அபிவிருத்தியில் மேற்படி சபைகள் பாரிய பங்கினை வகிக்கின்ற போதிலும் சபைகள் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டிய நிலையில் உள்ளன.

*அரசாங்க உத்தியோகத்தர்கள் சபைகளின் நடவடிக்கையில் ஆர்வம் காட்டுவதில்லை என்பதுடன் ஒத்துழைப்பும் நல்குவதில்லை. மேற்பார்வை செய்வதிலும் அசிரத்தை காட்டுகின்றனர்.

*அங்கத்தவர்களிடையே ஒற்றுமையின்மை; போதிய நேரமில்லை; அங்கத்தவர்கள் ஒருவருடன் ஒருவர் மோதுதல்; போதிய நிதியில்லாமை.

*ஏனைய கிராமிய மட்ட நிறுவகங்களின் போட்டி மனப்பான்மை.

*அரசாங்கம் அளிக்கும் நிதி போதாமை

*தொழில்நுட்ப, நிருவாக நிபுணத்துவமின்மை.

*கூட்டம் கூடும் இடம்; காணி, வாசிகசாலை வசதி இன்மை.

*அரசியல் காரணங்களுக்காகச் சபைகளைப் பதிவு செய்வதில் ஏற்படும் தாமதம்.

*பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஒத்துழையாமை.

*அரசியல்வாதிகளின் அநாவசிய தலையீடு.

மேற்சொன்ன காரணங்களினால் கிராம அபிவிருத்திச் சபைகள் இயங்குவதில் சிக்கல் ஏற்படுதல் என்னவோ உண்மைதான். சபைகளின் இயக்கத்திற்கு இக்காரணிகள் தடையாக இருக்காவிட்டால் கிராமங்கள் துரித கதியில் முன்னேற்றம் காணும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# மரக்கறிக்கு நியாய விலை

## (ஒரு சம்பாஷணை)

செல்லையா: ஆர் கந்தையாவோ? துலையால வாறியள் போல.........

கந்தையா: ஓமோம், சந்தையில மரக்கறிகளை வித்துட்டு வாறன்.

செல்லையா: சந்தைக்கு போய் நீங்க மரக்கறிகளை வித்தியளோ? என்ன சங்கதி? முந்தி கமத்தில இருந்தபடியே மரக்கறிகளை விற்கிறனியல்தானே.

கந்தையா: அது அந்தக்காலம் செல்லையா இப்ப அப்படி விற்க முடியாது. வித்தால் கையைத்தான் கடிக்கும்.

செல்லையா: ஏன் என்ன விஷயம்?

கந்தையா: இப்ப மரக்கறி விற்கிறது அந்தக் காலம் போலை அல்ல அந்தக் காலத்தில நாங்க சொல்லுற விலைக்குத்தான் சந்தைக்காரங்க வாங்குவாங்க.

செல்லையா: ஏனும்? என்ன காரணம்? இப்ப அப்படியல்ல சந்தையின்ட கால் விலைகல்லோ வாங்குறுங்க.

கந்தையா: முதல் காணம் எங்கடை ஆட்களுக்கு இப்ப "சடபுட" எண்டு எல்லாத்தையும் செய்யுற வேகம் வந்துட்டுது. முந்தி என்னட்ட காய்பிஞ்சு வாங்க வாறவங்க மாட்டு வண்டியில தான் வருவாங்க. மரக்கறியை அதிலை போட்டுக்கொண்டு தான் போவாங்க. இப்ப என்னடா வெண்டால் "வானில" அல்லோ வாறுங்க.

செல்லையா: வானிலோ? வண்டியில வாறதை ஏன் விட்டுட்டாங்களாம்?

கந்தையா: வண்டியில வந்து போறதுக்கு நேரம் போகுதமே. 'வான்' எண்டால் கெதியா போய் விடலாம்.

செல்லையா: அதுவும் சரிதான். வானுக்கு பெற்ருேல் செலவு போனுலும் கெதியா போய்விடலாம். காய்பிஞ்சுகள் கெதியா போறதால நல்ல நிலையில சந்தையை அடையும். நல்ல கிராக்கியும் இருக்கும்.

கந்தையா: அதுக்காக எங்கட காய்பிஞ்சுகளின்ட கொள்விலையை குறைக்கிறது நியாயமோ?

செல்லையா: நியாயமோ அநியாயமோ எனக்குத் தெரியாது. ஏற்றியிருக்கிற செலவையும் லாபத்தில கழிக்க வேண்டுமென்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியால் மரக்கறி கொள் விலையை குறைக்கத் தானே வேண்டும்? இதற்கு அவங்க தான் என்ன செய்கிறது?

கந்தையா: மாட்டு வண்டியில வந்தால் இந்த தேவையில்லாத செலவு இருக்காதே.

செல்லையா: செலவு இருக்காது தான் ஆனால், சந்தைக்கு காய் பிஞ்சுகளை கொண்டு போறதில நேரம்தான் போகும். அதால காய் பிஞ்சுகளுக்கு அவ்வளவு கிராக்கி இருக்காது.

கந்தையா: நீ சொல்லுறதிலேயும் நியாயம் கொஞ்சம் இருக்குது தான். எங்கடை சாமான்களுக்கு கிராக்கி இல்லாவிட்டால் கொள்விலையும் குறையும்.

செல்லையா: உங்கட காய் பிஞ்சுகளின்ட விலையை அவங்க குறைக்கிறதுக்கு வேறை என்ன காரணம்?

கந்தையா: எல்லாம் இந்த தரகர்கள்தான்

செல்லையா: தரகர்களோ?

கந்தையா: ஓமோம், முந்தியெல்லாம் சந்தையில வியாபாரம் செய்யுறவங்க தான் காய் பிஞ்சுகளை வாங்க வருவாங்க. இப்ப அந்த மாதிரி இல்லை. சந்தை வியாபாரிகளுக்கு இஞ்ச வாறதுக்கு நேரமில்லையாம். எண்டபடியால இந்த தரகர்கள் தான் எங்கிட்ட வருவாங்க அவங்க எங்களிட்ட வாங்கி சந்தைக்காரங்களிட்ட குடுக்கிறதுக்கு ஏதாவது லாபம் வைக்காமல் விடுவாங்களோ?

செல்லையா: லாபம் வைக்கத்தானே வேண்டும். அவங்களும் பிழைக்க வேண்டுமே.

கந்தையா: ஆனால், அவங்க கனக்க லாபம் எடுக்கிறாங்களே.

செல்லையா: எப்படி?

கந்தையா: செல்லையா, நாங்க மரக்கறிகளை உற்பத்தி செய்யுற அளவில தான் இருக்கிறம். மரக்கறி சந்தையில என்ன விலை போகுது என்டதை அறியுறதில மினக்கிடுவதில்லை. அதோட சந்தைக்குப் போய் மரக்கறிகளை விற்கிறதால் தங்கட நேரம் வீணாகி விடும் எண்டு நம்புகிறம். இதையெல்லாம் அறியுற தரகர்கள் எங்கட அறியாமையை தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு எங்களிட்ட இருந்து மலிவான விலையில காய் பிஞ்சுகளை வாங்கிக்கொண்டு போறாங்க.

செல்லையா: உண்மைதான் ... இந்த தரகர்கள் முறையை ஒழிக்க முடியாதோ? உங்களுக்கும் சந்தைக்காரர்களுக்கும் நடுவில இவங்க இருக்கிறதால் தான் அவங்க உங்களைப் பேய் காட்டுறாங்க.

கந்தையா: ஒழிக்கலாம் தான். ஆனால் நான் மட்டும் முயற்சித்தால் போதாது. கமக்காரங்க எல்லாரும் ஒண்டு சேர வேண்டும். உதாரணத்துக்கு பார், நான் கமம் செய்யுற இடத்தில மொத்தமாக பன்னிரண்டு பேர் கமம் செய்யுறாங்க. எல்லாரும் காய் பிஞ்சுகளை தரகர்களிட்ட தான் விற்கினம்.

செல்லையா: ஏன் தரகர்ட்ட விற்பான்? நேரே சந்தையில கொண்டு போய் குடுக்கலாம்தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: குடுக்கலாம். ஆனல், அதுக்கு நிறைய செலவாகுமே, சைக் கிளிலோ அல்லது கையிலோ கொண்டுபோறதென்டால் செலவு இருக்காது. ஆனல் 'வானில' கொண்டு போற தெண்டால் நிறைய செலவு இருக்கும்.

செல்லையா: என்ன மாதிரி?

கந்தையா: எங்கடை ஆட்கள் "வான்" நிறைய மரக்கறிகளை உற்பத்தி செய்யமாட்டினம். அதன் காற் பகுங்குத்தான் உற்பத்தி செய்வினம். காய் பிஞ்சுகளை ஒரு முழு "வானில" கொண்டு போனல் நஷ்டம் ஏறபடும்தானே? என்டபடியால நாங்க எல்லாருமே ஒன்று சேர்ந்து காய் பிஞ்சுகளை ஒன்டாக சந்தைக் குக் கொண்டு போனல் ஏற்றி யிறக்கும் செலவை. குறைகக லாம்.

செல்லையா: உங்கட கதை எனக்கு விளங்க யில்லை.

கந்தையா: ஒன்டு சேருகிற காய் பிஞ்சுகளை "வானிலோ", லொறியிலோ கொண்டுபோகலாம். சாமான் கள் மொத்தமாகப் போகும் போது ஏற்றியிருக்கிற கூலி குறையும் தானே?

செல்லையா: அது நல்ல முறை தான். என் டாலும் மரக்கறியில கிடைக் கிற காசை பிரிக்கிறதில அடி பிடி வருமே.

கந்தையா: அதுக்கு ஒற்றுமை வேனும் மரக்கறியை லொறியிலோ, "வானிலோ" கமக்காரங்க போடுவாங்க தானே? அவங் களில ஒரு நம்பிக்கையான ஆள் சந்தைக்கு போய் காய் பிஞ்சுகளை வித்துட்டு வர வேண்டும். பிறகு கமக்காரங்க குடுத்த காய் பிஞ்சுகளுக்கு ஏற்றமாதிரி காசை பகிர்ந் தளிக்களாம். இதனல் கமக்கா ரங்க சந்தைக்கு போய் வாற நேரத்தை கமத்தில செல வழிக்கலாம்.

செல்லையா: மரக்கறியெல்லாம் ஒரே வகை யான ஒரே தரத்தை கொண் டிருந்தால் காசைப் பிரிக் கிறதில அடிபிடி வராது. ஆனல், தரம் குன்றியிருந்த தால் அழுகின கத்தரிக்காய்க் கும் நல்ல தரமான கத்தரிக் காய்க்கும் ஒரு விலை குடுக்க முடியுமோ?

கந்தையா: அதுக்கு கமக்காரரில் ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் காய் பிஞ்சுகளின் தரத்தை நிர்ணயித்து அதற்கேற்ற மாதிரி காசை குடுத்து வழி அமைக்க வேண்டும்.

செல்லையா: அது முடிகிற காரியமோ? அவர் தரத்தை நிர்ணயிப் பதை மத்தவங்க ஒத்துக் கொள்ளுவாங்களோ? அவரும் ஒரு கமக்காரராக இருக்கிற தாலதன்ட உற்பத்தியைஅதிக அதிக விலைக்கு விற்க முயற்சிப் பார்.

கந்தையா: அந்த நிலை இங்க ஏற்படாது ஏனென்டால் ஒரு கமக்காரன் மட்டும் தான் தரத்தை நிர் ணயிக்கமாட்டான். ஒவ்வொரு பருவத்துக்கும் ஒரு கமக்கா காரன் இந்த வேலையில ஈடு படுவான். இதனல் தங்கட காய் பிஞ்சுகளையும் மற்றவன் சரிவர தரம் நிர்ணயிக்கமாட் டான் என அஞ்சும் ஒவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொரு கமக்காரனும் நேர் மையாக நடப்பான்.

செல்லையா: நீங்க சொல்லுறதைப் பார்த் தால் கூட்டுறவு அடிப்படை யில் காய் பிஞ்சுகளை விற்க வேண்டும்போல.

கந்தையா: ஓமோம் நான் அதைத்தான் இப்படி உனக்கு விளங்கிற விதத்தில சொல்லுறன். காய் பிஞ்சுகளை விக்கிறதில மட்டு மல்ல கமத்தொழிலையும் கூட் டுறவு அடிப்படையில் கரும மாற்றினல் நிறைய பலன் இருக்குது. இதனல் கமத் தொழில் சம்பந்தப்பட்ட பல் வேறு வேலைகளுக்கும் ஒவ் வொருவர் கருமமாற்றலாம்.

செல்லையா: கந்தையா அண்ணை நீங்க சொல்லுறது எனக்கு விளங்க யில்லை.

கந்தையா: செல்லையா, கமம் எண்டாப் போலை சும்மா மரக்கறிகளை நட்டவுடன் காய்க்குமோ? நிலத்தை உழ வேண்டும். இதுக்கு ''ட்ராக்டர்'' அல்லது கலப்பை வேண்டும். விதைகள் வேண்டும். கிருமிநாசினி வேண் டும். உரம் வேண்டும். இதை யெல்லாம் பெறுவதற்கு கமக் காரன் தான் போக வேண் டும். ஆனல், கூட்டுறவு முறை யில் கமத்தை மேற்கொண் டால் ஒருவர் எல்லோருக்கும் சேர்த்து உரம் கொண்டு வர லாம். மற்றவன் விதை கொண்டு வரலாம். இன்னெ ருவன் கிருமிநாசினி கொண்டு வரலாம். இப்படி ஒவ்வொரு வரும் ஒவ்வொரு வேலையை கவனிப்பதால நேரத்தையும் செலவையும் மிச்சப்படுத்த லாம் தானே?

செல்லையா: ஓ! நீங்க சொல்லுறது எனக் குப் புரியுது. ஆனல் இது எல்லாம் நடைமுறையில சாத் தியப்படுமா?

கந்தையா: சாத்தியப்படும் என்ற நம் பிக்கை எனக்குண்டு. ஆனல் இப்போதைக்கு அல்ல தரகர் கள் எங்களை அளவுக்கதிமாக சுரண்டுகிருர்கள் என்டதை கமக்காரர்கள் உணர்ந்த பிறகு தான் இது சாத்தியப்படும். அந்த நள் வரை நான் காத் திருக்கத்தான் போறன். அது வரைக்கும் நான் என்ட மரக் கறிகளை சந்தைக்குக் கொண்டு போகத்தான் வேண்டும்.

செல்லையா: தனியாக மறக்கறிகளை சந் தைக்குக் கொண்டு போனல் அதிக செலவாகும் என்டு இப்பத்தானே சொன்னியள்.

கந்தையா: சொன்னன் தான், ஆனல், நான் சின்ன சின்னக் கமக் காரன், என்ட உற்பத்தியை சைக்கிளில் கொண்டு போக லாம். கூட்டுறவு அடிப்படை யில் என்ட உற்பத்தியை கொண்டு போற காலம் வந்த வுடன் சைக்கிளில் கொண்டு போறதை விட்டுவிடுவன்.

செல்லையா: நானும் இனி கூட்டுறவு அடிப்படையில் தான் கமம் செய்யப் போறன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

### கமநல

# குறுக்கெழுத்துப் போட்டி

| முதற் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றும் பரிசு |
|---|---|---|
| 25/- | 15/- | 10/- |



பெயர்: ...............................................

விலாசம்: ...............................................

...............................................

### போட்டி நிபந்தனைகள்

1. கமநலத்தில் வெளிவரும் கூப்பன்களையே நிரப்பி அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்ப முடியும். ஆனுல், ஒருவருக்கு ஒரு பரிசே வழங்கப்படும்.

2. போட்டி முடிவுகள் குறித்து கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் இயக்குனரே இறுதி முடிவு எடுப்பார்.

3. போட்டி தொடர்பாக எவ்வித கடிதப் போக்குவரத்துகளும் வைத்துக்கொள்ளக் கூடாது.

4. குலுக்கல்மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று சரியான விடைகளைக் கொண்ட கூப்பன்களுக்கு முறையே, முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகள் வழங்கப்படும்.

5. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:

"கமநலம்" த.பெ.எண் 1522, கொழும்பு-7.

### இடமிருந்து வலம்

1. இதில் ஈடுபட குறிப்பாக பிள்ளைகளுக்கு விருப்பமுண்டு.

6 இலங்கையில் இதன் எண்ணிக்கை இருபத்துநான்கு,

9 பசித்தவனுக்கு இது அவசியம் (சொல் குழம்பியுள்ளது)

10. மாறிநிற்கும் ஈஸ்வர பாதம் (சொற்குழப்பம்)

11 இல்லை என்பதற்கு எதிர்ச் சொல்.

12, தொன் என்றசொல்லை சிலர் இப்படியும் எழுதுவார்கள். (சொல்குழம்பியுள்ளது)

13. இப்போட்டியில்வெற்றி பெறுவேன்என்ற.."எனக்குண்டு

16. கமக்காரன் வளர்க்கும் ஒரு பிராணி.

18. மாம்பழத்தை தின்னும் முன் அதன் தோலை என்ன செய்ய வேண்டும்.

19. மட்டையிலிருந்து எடுக்கும் ஓர் உப பொருள்.

20 வட்டத்தின் நடுப்பகுதி

21- அழுபவர்கள் இதையும் செய்யக்கூடும்.

### மேலிருந்து கீழ்

1. கமக்காரன் இதைசெய்வான்

2. வடபகுதியிலுள்ள ஒரு மாவட்டம்

3. வீட்டுப்பிராணிகளில்இதுவும் ஒன்று (சொல் குழம்பியுள்ளது)

4. ஒரு சமையல் பாத்திரம்

5. சதுரம்,முக்கோணம் என்ற வரிசையில் இதுவும் ஒன்று. (சொல் குழம்பியுள்ளது)

7. காடு என்பதற்கு இன்னொரு சொல்

8. பன்னிரண்டு என்றஎண்ணிக்கையை இப்படியும் அழைப்பர்

13. இந்த மிருகம் ஊளையிடும்

14. குழந்தையை இப்படியும் கூப்பிடலாம்

15. உங்களுக்குஒரு பதவிகிடைத்தால்இதைச்செய்யவேண்டும்

16. இப்போட்டியை செய்வதில் உங்களுக்கு ..... உண்டா?

17. இலங்கை ஒரு............ (சொல் குழம்பியுள்ளது)

18. பொய் என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PUBLICATIONS OF THE AGRARIAN RESEARCH AND TRAINING INSTITUTE

## *RESEARCH STUDY SERIES* — *LOCAL*

1. COTTON — The Economics of Expansion in Sri Lanka by J. Farrington (1979) — Rs. 10.00
2. POLICIES AND IMPLEMENTATION OF LAND REFORM IN SELECTED VILLAGES OF SRI LANKA by R. D. Wanigaratne, W. Goonaratna, N. Shanmugaratnam (1979) — Rs. 15.00
3. AN ANALYSIS OF THE PRE-MAHAWELI SITUATION IN $H_4$ & $H_5$ AREAS IN KALA-OYA BASIN (1979) — Rs. 10.00
4. FARMERS KNOWLEDGE AND PERCEPTION OF IMPROVED TECHNOLOGY by A. M. T. Gunawardena & M. L. Wickramasinghe (1980) — Rs. 10.00
5. FACTORS INFLUENCING VEGETABLE PRICES A Study of the vegetable economics in Sri Lanka by P. J. Gunawardena, L. R. A. Chandrasiri (1980) — Rs. 20.00
6. RAINFED FARMING IN THE DRY ZONE OF SRI LANKA by Samad M. Goonaratne, Wickramasekera, W. Wijeratne C. M. (1980) — Rs. 20.00
7. AGRICULTURE AND SOCIETY IN THE LOW COUNTRY (Sri Lanka) by Moore M. P and Wickramasinghe G. (1980) — Rs. 35.00
8. A STUDY OF FIVE SETTLEMENT SCHEMES PRIOR TO IRRIGATION MODERNIZATION — PAVATKULAM — Rs. 12.50
   — PADAVIYA — Rs. 10.00

## OCCASIONAL PUBLICATION SERIES

9. MANAGING THE VILLAGE ENVIRONMENT by Moore M. P., Gamini Wickramasinghe (1978) — Rs. 3.50
10. PERIODIC RURAL MARKET IN THE KURUNEGALA DISTRICT (1981) — Rs. 10.00

*Inquiries:*

**Publication Assistant,**
**Agrarian Research and Training Institute,**
**P. O. Box: 1522,**
**114, Wijerama Mawatha,**
**Colombo-7 — Sri Lanka.**

Printed at Crown Printing Works 105, San Sebastian Street, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org